
2019 க.பொ.த (உயர் தர)ப் பரீட்சை



எழுதும் மாணவர்களுக்கான



இறுதிக் கருத்தரங்கு



K.S. Nimalraj B.A

ஆனந்தா கல்வி நிலையம்

அரசடி,மட்டக்களப்பு.

கட்டணம் 300/=

மாணவர்களுக்கான அறிவுறுத்தல்கள்

01. எல்லா வினாக்களுக்கும் விடையளித்தல் வேண்டும்
02. தரப்பட்டுள்ள வினாப்பத்திரத்தில் உங்கள் சுட்டெண்ணை குறிப்பிட வேண்டும்
03. இவ்வினாப்பத்திரம் **A B** எனும் இரு பகுதிகளைக் கொண்டது
04. **பகுதி A** 1 தொடக்கம் 30 வினாக்கள் ஒவ்வொன்றும் **(1) (2) (3) (4) (5)** என எண்ணிடப்பட்ட விடைகளில் சரியான விடையைத் தெரிவு செய்து அதனைக் குறித்து நிற்கும் இலக்கத்தை தரப்பட்டுள்ள அறிவுறுத்தலுக்கு அமைய விடைத்தாளில் புள்ளடி **(X)** இட்டு காட்டுதல் வேண்டும்
05. **பகுதி B** 20 சுருக்க வினாக்களைக் கொண்ட பகுதியாகும் இவ்வினாக்களுக்கான விடைகளை இவ்வினாப்பத்திரத்திலேயே விடையளித்தல் வேண்டும்
06. ஒரு வினாவுக்கு **2** புள்ளிகள் வீதம் **50** வினாக்களுக்கும் மொத்தமாக **100** புள்ளிகள் வழங்கப்படும்
07. இவ்வினாப் பத்திரத்திற்கான நேரம் 02 மணித்தியாலங்கள் வழங்கப்படும்

- **01 தொடக்கம் 15 வரையிலான வினாக்கள் ஒவ்வொன்றும் வினாவின் தலைப்புடன் தொடர்பாக ஐந்து கூற்றுக்களைக் கொண்டுள்ளது அவற்றுள் நான்கு கூற்றுகள் சரியானவையாகும்.சரியான கூற்றுகளின் தொகுதியைத் தெரிவு செய்க**

1.அரசறிவியல் அறிமுகம்

A. கி.மு 4ம் நூற்றாண்டில் கிரேக்கத்தில் நகர அரசுகளை மையமாகக் கொண்டு தோற்றம் பெற்றது
B. 25 நூற்றாண்டுகள் பழமை வாய்ந்த நீண்ட வரலாற்றைக் கொண்டமைந்த ஓர் கற்கை நெறியாகும்
C. பிளேட்டோ,அரிஸ்டோட்டில் போன்ற கிரேக்க மாமேதைகள் தமது அகடமி,லைசியம் எனும் கல்விக் கூடங்கள் மூலம் அரசியலை அறிமுகப்படுத்தினர்
D. 1948ம் ஆண்டு பாரிஸ் நகரில் இடம்பெற்ற யுனெஸ்கோ மாநாட்டில் அரசியல் எனும் சொற்பதத்தினை ஏகமனதாக ஏற்றுக்கொண்டனர்.
E. சமூகத்தைக் கருப்பொருளாகக் கொண்டு தற்காலம் வரை நிலத்துள்ள நவீனத்துவம் சார்ந்த கற்கை நெறியாகும்

1. ABCD **2.BCDE** **3.ACDE** **4.ABDE** **5.ABCE**

2. அரசியல் கற்றல் ***(Doing politics)***

A. கற்கையில் ஈடுபடும் நபர்களுக்கு அரசியல் சார்ந்த மதிநுட்பம் அவசியமாகிறது
B. கற்கையில் ஈடுபடும் நபர்களுக்கு சிறப்புத் தேர்ச்சி,திடசங்கற்பம் அவசியமாகிறது
C. கற்கையில் ஈடுபடும் நபர்களுக்கு ஆர்வம்,தியாகம் போன்ற குணாம்சங்கள் அவசியமாகிறது
D. கற்கையில் ஈடுபடும் நபர்களை பாடசாலை,பல்கலைக் கழகம்,சட்டக்கல்லூரி போன்ற தாபனங்களில் காணலாம்
E. கற்கையில் ஈடுபடும் நபர்கள் பிரயோக அரசியலில் உள்ளவற்றையே அதிகம் கற்றுக் கொள்கின்றனர்

1. ABCD **2.BCDE** **3.ACDE** **4.ABDE** **5.ABCE**

KS.NIMALRAJ

3. அரசியல் செய்தல் *(studying politics)*

A. அரசியலில் ஆர்வம்,அதிக ஈடுபாடு கொண்ட தலைவர்களை அடையாளம் காட்டுகிறது

B. அரசியல்வாதிகள்,அரசியற்கட்சிகள் செயற்பாடுகளை அடையாளம் காட்டுகிறது

C. சட்டத்துறை,நிறைவேற்றுத்துறை,நீதித்துறை ஆகிய தாபனங்களின் செயற்பாடுகளை அடையாளம் காட்டுகிறது

D. பங்குபற்றும் அரசியல்வாதிகளுக்கு,நபர்களுக்கு அரசியல் அறிவு,தகமைகள்,சமூக அந்தஸ்து அவசியமாகிறது

E. கோட்பாட்டு அரசியலில் உள்ள அரசியல் பரப்புக்களை அதிகாரத்தின் மூலம் சாத்தியமாக்கும் செயற்கலையாகும்

1. ABCD 2.BCDE 3.ACDE 4.ABDE 5.ABCE



மேலதிகமாக கவனத்திற் கொள்ள வேண்டிய விடயங்கள்

அரசறிவியலைக் கற்பதன் முக்கியத்தவம்

அரசறிவியல் கற்கை நெறியின் இயல்புகள்

அரசறிவியலைக் கற்கும் வழிமுறைகள்

4. அரசியலைக் கற்பதற்கு பயன்படுத்தப்படும் மெய்யியல் அணுகுமுறை

A. அரசியலின் உண்மை நிலையை அன்றி கற்பணையில் உதிக்கும் அரசியலை பெரிதும் அய்வு செய்கின்ற மிகப்பழமையான அணுகுமுறையாகும்

B. பிளேட்டோ தனது குடியரசு எனும் நூலிலும் தோமஸ் மூர் தனது கற்பணை உலகு எனும் நூலிலும் சிறப்பித்து கூறியுள்ள ஓர் அணுகுமுறை

C. ஐரோப்பிய அரசியல் சிந்தணையாளர்களான செயின் ஒகஸ்டின்,சிசரோ,ஜோன் லொக் போன்றோர் பிரபல்யப்படுத்தியுள்ள ஓர் அணுகுமுறை

D. அரசியலை அனுபவ ரீதியாகவும்,கோட்பாட்டு ரீதியாகவும் விளக்கிக் கூறுகின்ற ஓர் அணுகுமுறை

E. 20ம் நூற்றாண்டில் ஜோன் நோல்ஸ்,சார்லஸ் டேலர்,மகாத்மா காந்தி ஆகியோர் சிறப்பித்துக் கூறியுள்ள ஓர் அணுகுமுறை

1. ABCD 2.BCDE 3.ACDE 4.ABDE 5.ABCE

5. நடத்தைவாத (விஞ்ஞான) அணுகுமுறை

A. 20ம் நூற்றாண்டின் முதலரைப் பகுதியில் அமெரிக்காவில் அறிமுகமாகி 2ம் உலகப்போரின் பின்னர் அரசறிவியலில் பிரபல்யமான ஓர் அணுகுமுறை

B. கரோல்ட் லாஸ்வெல்,டேவிட் ரூமன்ட்,டேவிட் ஈஸ்டன் போன்றோர் இவ்வணுகு முறையின் ஆரம்ப ஆய்வாளர்களாகும்

C. மனிதர் அரசியலில் பங்கேற்றல்,வாக்களித்தல்,தீர்மானம் எடுத்தல் போன்ற அரசியல் நடத்தைகள் அதிகளவு ஆய்வு செய்கின்றது

D. நிரூபிக்கக்கூடிய அனுபவம் சார்ந்த காரணிகளைக் கொண்ட நிலைகளை முக்கியத்துவப்படுத்தி ஆய்வு செய்கிறது

E. ஆய்வின் போது நுட்பமுறைகளைக் காட்டிலும் இறுதி விளைவுகளுக்கு அதிக முக்கியத்துவம் வழங்குகின்றது

1. ABCD 2.BCDE 3.ACDE 4.ABDE 5.ABCE



மேலதிகமாக கவனத்திற் கொள்ள வேண்டிய விடயங்கள்

01. ஒப்பீட்டு அணுகுமுறை 03. பன்மைத்துவ அணுகுமுறை

02. பெண்ணியல்வாத அணுகுமுறை 04. அரசியல் பொருளியல் அணுகுமுறை

K.S.NIMALRAJ

6. **தாராளவாதம் எனும் அரசியல் கருத்தியல்**

A. Liber எனும் இலத்தீன் மொழியில் இருந்து தோற்றம் பெற்று ஆங்கில மொழியில் Liberalism என அழைக்கப்படுகிறது.

B. **அடம் ஸ்மித்,ஜோன் லொக்,டி.எச்.கிரீன்** போன்ற சிந்தணையாளர்களால் பேணிப் பாதுகாத்து அபிவிருத்தி செய்யப்பட்ட ஓர் கருத்தியலாகும்

C. பழமைபேண் வாதம்,சோசலிசம் என்ற இரண்டுக்கும் இடைப்பட்ட ஓர் அரசியல் கருத்தை பிரதிபலிப்பதுடன் தீவிரவாதத்திற்கு எதிரானது என்றும் குறிப்பிடுகிறது

D. பொருளாதார ரீதியில் பழம் தாராண்மைவாதம்,நவீன தாராண்மைவாதம்,நவ தாராண்மைவாதம் எனும் வகைப்பாட்டைக் கொண்டுள்ளது

E. நவ தாராண்மைவாதம் அரசானது முதலீட்டாளராகவும் கொடையாளனாகவும் காணப்படல் வேண்டும் எனக் குறிப்பிடுகிறது.

1. ABCD 2.BCDE 3.ACDE 4.ABDE 5.ABCE



மேலதிகமாக கவனத்திற் கொள்ள வேண்டிய விடயங்கள்

01. சமூக ஜனநாயகவாதம் 02. குடியரசுவாதம் 03. தேசியவாதம்

04. பெண்ணியல்வாதம் 05. சோசலிசவாதம்

7. **அரசியற் கட்சிகள்**

A. அரசியல் மற்றும் பொருளாதார கொள்கைகளின் அடிப்படையில் மக்கள் ஆதரவை பெற்றுக்கொள்வதற்காக போட்டித் தன்மையுடன் செயற்படும் கூட்டம்

B. பிரித்தானிய தாராளவாதிகள் கட்சியின் கொள்கைகள் எனும் மையத்தை அடிப்படையாகக் கொண்டு தமது விளக்கங்களை வழங்கியுள்ளனர்

C. அமெரிக்க தாராளவாதிகள் கட்சியன் அதிகாரம் எனும் விடையத்தை மையமாகக் கொண்டு தமது விளக்கங்களை வழங்கியுள்ளனர்

D. மொரிஸ் டுவேஜர் மக்களுக்காக செயற்படும் காடர்கட்சி,உறுப்பினர்களக்காக செயற்படும் மகாஜனக் கட்சி என இரண்டாகப் பாகுபடுத்தியுள்ளார்

E. அரசியற்கட்சிகளின் ஒழுங்கமைப்பு பிரமிட்டு வடிவில் அமையப் பெற்றது அதன் உச்சியில் கட்சியின் தலைமைத்துவம் காணப்படும்

1. ABCD 2.BCDE 3.ACDE 4.ABDE 5.ABCE

8. **அழுக்கக் குழுக்கள்**

A. அரசியல் அதிகாரத்தை பிரயோகிக்கும் மனிதர்கள் மற்றும் நிறுவனங்கள் மீது செல்வாக்குச் செலுத்தி தமது நோக்கை நிறைவேற்றுகின்றது

B. தந்தி,துண்டுப்பிரசுரம்,ஊர்வலங்கள்,விருந்துபசாரங்கள்,பரிசில் வழங்குதல் போன்ற உத்திகள் மூலம் தமது நோக்கங்களை அடைந்து கொள்கின்றது

C. அரசியல் செயற்பாடுகளில் நேரடியாக தாக்கம் செலுத்தி மக்களை விழிப்புனர்வூட்டும் சாதனங்களாகத் தொழிற்படுகின்றது

D. தத்தமது தனிப்பட்ட நோக்கங்களை நிறைவேற்றும் வண்ணம் அரசாங்கத்திற்கு தகவல்களை வழங்கும் ஊடகங்களாகவும் செயற்படுகின்றன.

E. 1954இல் ஆதர் பென்லி அழுக்கக்குழுக்கள் பற்றிய சிந்தணையை வெளியிட்ட பின்னரே அரசியல் விஞ்ஞான கற்கையில் இக்குழுக்கள் விரிவுபடுத்தப்பட்டது

1. ABCD 2.BCDE 3.ACDE 4.ABDE 5.ABCE

K.S.NIMALRAJ



மேலதிகமாக கவனத்திற் கொள்ள வேண்டிய விடயங்கள்

01. சிவில் சமூகம் 02. ஒப்பீட்டு அரசியல் 03. பொதுத்துறை நிருவாகம்

9. அரசு எனும் தாபனம் அரசாங்கத்தில் இருந்து வேறுபடும் விதம்

A. அரசு எனும் தாபனம் நிலம்,மக்கள்,அரசாங்கம்,இறைமை எனும் அடிப்படையுடன் ஒழுங்கமைய அரசாங்கம் சட்டத்துறை,நிறைவேற்றுத்துறை,நீதித்துறை எனும் அடிப்படையில் ஒழுங்கமைந்துள்ளது

B. இறைமை எனும் உயர்வான அதிகாரம் அரசுக்கு உரித்துடையதாகக் காணப்பட அரசாங்கம் அவ்வதிகாரத்தை நடைமுறைப்படுத்தும் சேவகனாகும்

C. அரசானது வரையறுக்கப்பட் ஆயட்காலத்தையும் எல்லையையும் கொண்டிருக்க அரசாங்கமானது இவ்விரு வரையரைகளும் அவசியமற்றது என குறிப்பிடுகிறது

D. அரசானது ஒரு நாட்டில் வாழும் அனைத்து மக்களது பொதுவிருப்பினை பிரதிபலிக்க அரசாங்கமானது ஒரு குறிப்பிட்ட வர்க்கத்தினரை மாத்திரம் பிரதிபலிக்கிறது

E. அரசானது கட்புலனாகாதது,தொட்டுணரமுடியாதது,கற்பணைப் பொருள் சார்ந்து நிற்க அரசாங்கமானது கட்புலனாகக்கூடிய,தொட்டுணரக்கூடிய காட்சிப்பொருள் சார்ந்தது

1. ABCD 2.BCDE 3.ACDE 4.ABDE 5.ABCE

10. இறைமை அதிகாரம்

A. சமூகத்தில் எந்தவொரு நிறுவனத்திற்கும் இல்லாத அரசுக்கு மாத்திரம் உரித்தான உயர்ந்த அதிகாரமாகும்

B. சட்டங்களை உருவாக்கவும்,நடைமுறைப்படுத்தவும்,குற்றவாளிகளைத் தண்டிப்பதற்கும் உரித்தான உயர்ந்த அதிகாரமாகும்

C. சமூகத்தில் ஏனைய நிறுவனங்களுடன் அரசினை சமப்படுத்தியும்,உயர்த்தியும் காட்டும் உயர் அதிகாரமாகும்

D. பிரதானமாக உள்இறைமை,வெளிஇறைமை எனம் பாகுபாட்டினைக் கொண்டுள்ள அதிகாரம்

E. சமூகத்தில் உள்ளவர்களுக்கு கட்டளைகளைப் பிறப்பிப்பதற்கும்,ஏனையவர்களின் கட்டளைகளுக்கு அடிபணியாததுமான உயர்ந்த அதிகாரம்

1. ABCD 2.BCDE 3.ACDE 4.ABDE 5.ABCE

11. சமூக ஒப்பந்தக் கோட்பாடு

A. சமூக ஒப்பந்தம் ஒன்றின் விளைவாக அரசு உருவானது எனக் கூறும் கோட்பாடு

B. பிளேட்டோ,அரிஸ்டோட்டில்,குரேசியஸ் போன்ற அறிஞர்களின் ஊடாக முன்னிலைக்கு வந்த ஓர் கோட்பாடாகும்

C. தோமஸ் கொப்ஸ்,ஜோன் லொக்,ரூசோ போன்ற சிந்தணையாளர்களே இக்கோட்பாட்டின் முன்னோடிகளாக திகழ்ந்தனர்

D. ஆட்சியாளன் ஒப்பந்தத்தின் கட்சிக்காரன் அல்ல என ஜோன்லொக் தனது நூலில் தெளிவு படுத்தியுள்ளார்

E. மக்கள் இறைமை,பொதுச்சித்தம்,நேரடி ஜனநாயகம் போன்ற எண்ணக்கருக்களை ரூசோ இக்கோட்பாட்டில் பிரபல்யப்படுத்தியுள்ளார்

1. ABCD 2.BCDE 3.ACDE 4.ABDE 5.ABCE

KS NIMALRAJ BA



மேலதிகமாக கவனத்திற் கொள்ள வேண்டிய விடயங்கள்

01. தாராண்மைவாத கோட்பாடு 02. மாக்சிசக் கோட்பாடு

03. பாசிசக் கோட்பாடு 04. பெண்ணியல்வாதக் கோட்பாடு

12. ஒற்றையாட்சி முறைமை

A. சட்டம்,நிருவாகம்,நீதி எனும் முத்துறை அதிகாரங்களும் ஒரு மத்திய அரசினால் செயற்படுத்தப்படும்

B. பிராந்திய அலகுகளின் மாதிரி,இருப்பு உருவாக்கம்,நீக்கம் என்பன மத்திய அரசினால் தீர்மானிக்கப்படும்

C. அரசியல் யாப்பின் மூலம் மத்திய அரசிற்கும் பிராந்திய அலகுகளுக்கும் அதிகாரம் பிரித்து வழங்கப்பட்டு ஆட்சிமுறை இடம்பெறுகின்றன

D. எளிமையானதும்,வினைதிறன் மிக்கதுமான அரசாங்க முறைக்கான அடித்தளத்தை அமைத்து கொடுக்கிறது

E. நிருவாக செயற்பாடுகளை இலகுபடுத்துவதற்காக மத்திக்கு பணிந்து பிராந்திய அலகுகள் அதீத செயற்பாடுகளை வெளிப்படுத்துகிறது

1. ABCD 2.BCDE 3.ACDE 4.ABDE 5.ABCE

13. சமஸ்டியாட்சி முறைமை

A. அதிகாரத்தை இணைத்தல் அல்லாமல் பல மட்டங்களில் பங்கீட்டு நடைமுறைப் படுத்தப் படும் அரசாங்கமுறையாகும்

B. இருவகையான அசுகள் காணப்படுவதுடன் இவை நேரடியாகவே தங்கள் அதிகாரத்தை யாப்பின் மூலம் பெற்றுக்கொள்கின்றது

C. ஒழுங்கமைந்த சமஸ்டியில் மாநிலங்கள் சுயாதீனமாக செயற்படுவதுடன் எச்சந்தர்பத்திலும் பிரிந்து செல்லும் அளவிற்கு அதிகாரத்தைப் பெற்றுள்ளன

D. சுதந்திரமான நீதித்துறை காணப்படுவதுடன் இவை நீதிப்புனராய்வு அதிகாரத்தையும் பெற்றுள்ளது

E. இவ்வாட்சியில் பிரதேச அல்குகள் அமெரிக்காவில் ''மாநிலம் அல்லது மாகாணம்'' சுவிட்சர்லாந்தில் ''கன்ரன்கள்'' எனும் சிறப்புப் பெயர் கொண்டு அழைக்கப்படுகின்றது

1. ABCD 2.BCDE 3.ACDE 4.ABDE 5.ABCE

14. ஜனாதிபதித்துவ அரசாங்கமுறை

A. சட்டத்துறை,நிறைவேற்றுத்துறை ஒன்றிலிருந்து ஒன்று பிரிந்துள்ளதுடன் தனிப்பட்ட நிலைப்பினையும் கொண்டுள்ளது

B. சட்டத்துறையினால் முன்வைக்கப்படும் விசேடமான குற்றப்பிரேரணை முறைகளில் அல்லாமல் ஜனாதிபதியினை பதவி நீக்க முடியாது

C. அரசின் தலைவருக்கு உரித்தான வகிபங்கும் அரசாங்கத்தின் தலைவருக்கு உரித்தான வகிபங்கும் ஜனாதிபதியிடம் உரித்தாக்கப்பட்டிருக்கும்

D. ஆட்சிமுறையில் செயற்திறன்,உறுதித்தன்மை,ஜனநாயகத் தன்மை போன்ற அம்சங்களை கவனத்திற் கொள்கின்ற ஆட்சிமுறை

E. சட்டத்துறையின் கேள்விகளுக்கு பதிலளிக்க கடமைப்படாத சுயாதீனத் தன்மையுடைய சர்வாதிகார ஆட்சி முறை

1. ABCD 2.BCDE 3.ACDE 4.ABDE 5.ABCE

Ks.NIMALRAJ BA

15. மந்திரிசபை அரசாங்க முறைமை

A. சட்டத்துறைக்கும் நிறைவேற்றுத்துறைக்கும் இடையில் நெருக்கமான பிணைப்பினையும் ஒத்துழைப்பிணையும் எடுத்துக்காட்டுகின்ற ஓர் அரசாங்க முறைமை
B. சட்டத்துறையின் ஒத்துழைப்பின்,விருப்பின் அடிப்படையில் அரசாங்கம் நிலைத்திருக்கும்
C. சட்டத்துறையானது பிரதமர் உள்ளிட்ட அமைச்சர்கள் கொண்ட மந்திரிமார் குழுவிற்கும் அதன் ஏவிகளுக்கும் செவிசாய்த்து செயற்பட வேண்டும்
D. எதிர்கட்சி பலம் மிக்கதாக காணப்படுவதுடன் ஆளுங்கட்சியின் குறை நிறைகள் உடனுக்குடன் சுட்டிக்காட்டப்படும்
E. ஜனநாயகத் தன்மை மிக்க மொண்டஸ்கியூவின் சிந்தணையை புறக்கனிக்கின்ற ஓர் அரசாங்க முறையாகும்

1. ABCD 2.BCDE 3.ACDE 4.ABDE 5.ABCE



மேலதிகமாக கவனத்திற் கொள்ள வேண்டிய விடயங்கள்

01. கூட்டு சமஸ்டியாட்சி 02. கலப்பு அரசாங்கமுறை 03. அரசியல் யாப்பு

- **16 தொடக்கம் 20 வரையிலான வினாக்கள் ஒவ்வொன்றும் ஐந்து கூற்றுக்களைக் கொண்டுள்ளது அவற்றுள் ஒரு கூற்று தவறானவையாகும்.தவறான கூற்றினைத் தெரிவு செய்க**

16. காலணித்துவ அரசு

1. குடியேற்ற அரசுக்கும் குடியேற்றத்திற்குட்பட்டுள்ள அரசுகளுக்கும் இடையிலான தொடர்புகளை விளக்கும் எண்ணக்கருவாகும்
2. பலம் பொருந்திய அரசு பலவீனமான அரசுகளை தமது ஆதிக்கத்தின் மூலம் கட்டுப்படுத்தி ஆட்சி புரியும் செயற்பாடு
3. காலனித்துவ அரசின் அபிலாசைகள் அன்றி காலனித்துவத்திற்குட்பட்டுள் அரசுகளின் அபிலாசைகளே அதிகளவு பூர்த்தி செய்யப்படுகின்றது
4. இலங்கையில் வரலாற்று ரீதியாக போர்த்தகேயர்,ஒல்லாந்தர்,ஆங்கிலேயர் இவ்வாறான ஆட்சி முறைகளை அமைத்தமை குறிப்பிடத்தக்கது
5. பிரித்தானியா,பிரான்ஸ்,ஒல்லாந்து,போர்த்தக்கல்,ஸ்பெயின் போன்ற அரசுகளின் ஆதிக்கத்தினாலேயே இவ்வரசு முறை ஆரம்பிக்கப்பட்டன.

17. 1833 கோல்புறுக் கமரன் அரசியல் திட்டம் இலங்கையில்

1. இரட்டை ஆட்சி முறைமையை ஒழித்தது
2. இரட்டை நிருவாக முறையை அறிமுகம் செய்தது
3. இரட்டைப் பொருளாதார முறையை அறிமுகம் செய்தது
4. இரட்டை இராஜகாரிய முறைமையை ஒழித்தது
5. இரட்டை நீதிமுறைமையை ஒழித்தது



மேலதிகமாக கவனத்திற் கொள்ள வேண்டிய விடயங்கள்

01. 1833 அரசியல் மாற்றம் 02. 1833 பொருளாதார மாற்றம்

03. 1833 சமூக மாற்றம் 04. 1910-1921-1921-1924 அரசியல் சீர்திருத்தங்கள்

18. 1931 டொனமூர் அரசியல் திட்டம்

1. இலங்கை வாழ் மக்களுக்கு முதன்முதலாக வாக்குரிமையினை அறிமுகப்படுத்தியது
2. 21 வயதிற்கு மேற்பட்ட ஆண் பெண் இருபாலாருக்கும் சர்வஜன வாக்குரிமையை வழங்கியது
3. இரு குழுக்களாக பிரிந்து செயற்படும் 10 பேர் கொண்ட மந்திரிசபையை அறிமுகப்படுத்தியது
4. தேசாதிபதி, 03 அரசகாரிய தரிசிகள் பிரித்தானிய ஏகாதிபத்திய நலன்களை பாதுகாக்கும் சிபார்சுகளாக அறிமுகப்படுத்தப்பட்டது
5. சுதேச தலைவர்களை மாத்திரம் உள்வாங்கிய வகையில் ஓர் நிருவாகக்குழு ஆட்சி முறையினை அறிமுகப்படுத்தியது




மேலதிகமாக கவனத்திற் கொள்ள வேண்டிய விடயங்கள்

01.தேசாதிபதி 02. நிருவாகக்குழு ஆட்சி 03. மந்திரிசபை 04.அரசாங்கசபை

19. 1947 சோல்பரி அரசியல் திட்டம்

1. வரம்புடைய இறைமை அதிகாரம் கொண்ட இருசபைகளையுடைய பாராளுமன்றம் முதன் முதல் அறிமுகம் செய்யப்பட்டன
2. சிறுபாண்மை மக்களைப் பாதுகாக்க விசேட ஏற்பாடாக சிறுபாண்மையோர் காப்பீடுகள் அத்தியாயம் அறிமுகப்படுத்தப்பட்டது
3. சட்டங்களை பரிசீலணை செய்யும் அதிகாரம் கொண்ட நீதித்துறையினை அறிமுகம் செய்தனர்
4. பிரித்தானியருடனான தொடர்புகளை பேணும் சுதந்திர அரசியல் யாப்பாக அறிமுகம் செய்தனர்
5. வெஸ்ட்மினிஸ்டர் அரசியல் யாப்பை புறக்கனித்து கோலிஸ்ட் யாப்பு முறையினை அடிப்படையாகக் கொண்டு அமைக்கப்பட்டது




மேலதிகமாக கவனத்திற் கொள்ள வேண்டிய விடயங்கள்

01. மகாதேசாதிபதி 02. பாராளுமன்றம் 03. சிறுபாண்மையோர் காப்பீடு

20. 1972 முதலாம் குடியரசு அரசியல் திட்டம்

1. வரையறுக்கப்பட்ட அதிகாரங்களைக் கொண்ட ஓரங்கமன்ற சட்டத்துறையாக தேசிய அரசுப் பேரவையினை அறிமுகம் செய்தது
2. வெஸ்ஸ்மினிஸ்டர் முடியாட்சி முறையை நீக்கிய குடியரசு யாப்பினை வரைந்த கொண்டனர்
3. சொந்த மண்ணில் சுதேசிய தலைவர்களால் இலங்கைக்கே உரித்தான பாரம்பரியங்களுடன் வரையப்பட்ட அரசியல் யாப்பாகும்
4. பேரினவாத மொழிக்கு அரச அந்தஸ்து சலுகைகள் வழங்கிய அரசியல் திட்டமாகும்
5. ஜனாதிபதி எனும் பதவியினை முதன்முதலாக இலங்கையில் அறிமுகம் செய்த அரசியல் திட்டமாகும்



மேலதிகமாக கவனத்திற் கொள்ள வேண்டிய விடயங்கள்

01. தேசிய அரசுப்பேரவை 02. அரசியல் யாப்பு நீதிமன்றம் 03. ஜனாதிபதி

RAVIMALRAJ BA

இலங்கையின் அரசியல் திட்டம் தொடர்பான கீழ்வரும் கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு 21ஆம் 22ஆம் வினாக்களுக்கு விடையளிக்க அத்துடன் 23,24,25 ம் வினாக்களுக்கு பொருந்தும் சேர்மானங்களைத் தெரிவு செய்க

A. இரண்டு சபைகளைக் கொண்ட சட்டத்துறை
B. தேர்தல்,நியமனம் ஆகிய இரு முறைகளில் தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர்களை உள்ளடக்கியுள்ளது
C. தேர்தல் மூலம் தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர்களை மாத்திரம் கொண்டுள்ளது
D. வரையறுக்கப்பட்ட சட்டவாக்க அதிகாரங்களை கொண்டுள்ளது
E. வரையறையற்ற சட்டவாக்க அதிகாரங்களைக் கொண்டுள்ளது
F. சட்டங்களுக்கு இறுதி ஒப்பம் இடுபவர் அரசின் தலைவர்
G. சட்டங்களுக்கு இறுதி ஒப்பம் இடுபவர் சபாநாயகர்
H. பதவிக்காலம் 05 ஆண்டுகள் காலம் என வரையறுக்கப்பட்டுள்ளது
I. பதவிக்காலம் 06 ஆண்டுகள் என வரையறுக்கப்பட்டுள்ளது
J. அரச தத்துவத்தின் மீயுயர் ஸ்தாபனமாக போற்றப்படுகின்றது

21. 1947 சோல்பரி அரசியல் திட்டத்தில் தாபிக்கப்பட்ட சட்டத்துறை தொடர்பான சரியான சேர்மானம்.

1. BEFH 2. ABGH 3. ADFI 4. ABFH 5. CHIJ

22. 1972 அரசியல் திட்டத்தில் தாபிக்கப்பட்ட சட்டத்துறை தொடர்பான சரியான சேர்மானம்

1. CEFI 2. BEIJ 3. ACGI 4. EGIJ 5. DFIJ

23. 1978 அரசியல் திட்டம்

A. இலங்கை சுதந்திரமும் இறைமையும் தன்னாதிக்கமும் கொண்ட சோசலிச ஜனநாயகக் குடியரசு எனும் பெயரைப் பெற்றுக் கொண்டது
B. பிரித்தானியருடனான தொடர்புகளைத் துண்டித்து ஆசியாவில் கோலிஸ்ட் அரசியல் யாப்பினைப் பின்பற்றி உருவாக்கப்பட்டது
C. இறைமை அதிகாரங்கள் மக்களுடைய கைகளில் உள்ளது என குறிப்பிடம் ஓர் குடியரசு அரசியல் திட்டம்
D. ஜனாதிபதித்துவ,பாராளுமன்ற அரசாங்கமுறைகளின் பண்புகளை உள்ளடக்கிய கலப்பு அரசாங்க முறையினை தாபித்த அரசியல் திட்டம்
E. இலங்கையில் உள்ள பல இனங்களுக்கும்,மதங்களுக்கும் உரிய வாய்ப்பினைப் பெற்றுக் கொடுக்கும் ஓர் ஒற்றையாட்சிக் குடியரசு என குறிப்பிடுகிறது

1. ABCD 2.BCDE 3.ACDE 4.ABDE 5.ABCE



மேலதிகமாக கவனத்திற் கொள்ள வேண்டிய விடயங்கள்

01. பாராளுமன்றம் 02. ஜனாதிபதி 03. உயர்நீதிமன்றம்
04. விகிதாசார பிரதிநிதித்துவ முறை 05. 17ம் திருத்தம் 06. 18ம் திருத்தம்
07. 19ம் திருத்தம் 08. அரசியற் கட்சிகள்

K.S.KUMALRAJ BA

24. **ஐக்கிய நாடுகள் தாபனத்திற்கும் இலங்கைக்கும் இடையிலான தொடர்பு**

A. 1955ம் ஆண்டு டிசம்பர் மாதம் 14ம் திகதி இலங்கை ஐக்கிய நாடுகள் தாபனத்தில் அங்கத்துவம் பெற்றது

B. ஐக்கிய தேசிய கட்சியின் பிரதமரான டி.எஸ் சேனநாயக்க அங்கத்தவத்தைப் பெற்றுக் கொடுத்த முன்னோடியாக திகழ்ந்தார்

C. 1952 இல் ஐக்கிய நாடுகளின் அபிவிருத்தி வேலைத்திட்டம் (UNDP) இலங்கையில் நடைமுறைப்படுத்தப்பட்டது

D. 1960 – 1965 வரை இலங்கை ஐக்கிய நாடுகள் தாபனத்தின் பாதுகாப்புச் சபையில் உத்தியோகப்பற்றற்ற அங்கத்தவத்தையும் பெற்றுக்கொண்டது

E. ஐக்கிய நாடுகள் தாபனத்தின் மனித உரிமைகள்,தொழிலாளர்,சுற்றாடல் உரிமைகளுக்கான பிரகடனத்தை இலங்கை ஏகமனதாக ஏற்றுக்கொண்டுள்ளது

1. ABCD 2.BCDE 3.ACDE 4.ABDE 5.ABCE

25. **பொதுநலவாயத்திற்கும் இலங்கைக்கும் இடையிலான தொடர்புகள்**

A. இலங்கையை உள்ளடக்கிய காலணித்தவ நாடுகளை மையமாகக் கொண்டு பெதுநலவாயம் உருவாக்கப்பட்டது

B. இலங்கையை இறுதியாக ஆண்ட பிரித்தாணிய அரசின் தலைவரே இப்பொதுநலவாய மாநாடுகளுக்கு தலைமை தாங்கினார்


C. இலங்கை 1948ம் ஆண்டு பொதநலவாயத்தில் அங்கத்துவம் பெற்றுக்கொண்டது

D. 1960களில் பிரதமர் சிறிமாவோ பண்டாரநாயக்க பொதுநலவாயத்தில் இலங்கையைப் பிரதிநிதித்துவப்படுத்தினார்

E. 23வது பொதுநலவாய நாடுகளின் அரச தலைவர்களின் மாநாடு 2013 நவம்பர் மாதம் இலங்கையில் இடம்பெற்றது

1. ABCD 2.BCDE 3.ACDE 4.ABDE 5.ABCE

S.NIMALRAJ BA



கவனத்திற் கொள்ள வேண்டிய விடயங்கள்

01. இலங்கையும் தெற்காசிய பிராந்திய ஒத்துழைப்பு அமைப்பும்

02. இலங்கையும் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கமும்

03. இலங்கையும் அரசசார்பற்ற நிறுவனங்களும்

04. இலங்கையும் அணிசேரா இயக்கமும்

26 தொடக்கம் 30 வரையிலான ஒவ்வொரு வினாவும் இரண்டு கூற்றுக்களைக் கொண்டுள்ளது ஒவ்வொரு வினாவுக்குமுரிய சோடிக் கூற்றுக்கு கீழ்வரும் அட்டவனை 01ற்கான வழிகாட்டியிலுள்ள (1) (2) (3) (4) (5) என்பவற்றுள் எந்த விடை பொருந்துகின்றது என்பதை குறிப்பிடுக

இலக்கம்	கூற்று 01	கூற்று 02
(1)	உண்மை	உண்மை
(2)	உண்மை	பொய்
(3)	பொய்	உண்மை
(4)	பொய்	பொய்
(5)	உண்மை	உண்மை என்பதுடன் முதலாவது கூற்றை தெளிவாக விளக்குகிறது

அட்டவணை 01

கூற்று 01	கூற்று 02
26. மோதல் என்பது தமக்கிடையில் ஒன்றுக்கொன்று பொருத்தமில்லாத நோக்கங்களை உடைய இரு குழுக்களுக்கிடையிலான ஓர் தொடர்பாகும்	இவ்வாறு உருவாகும் மோதல்களின் விளைவுகளை அளவீடு அல்லது மதிப்பீடு செய்து கொள்ள முடியும்
27. 17ம் திருத்தச் சட்டம் இலங்கையில் அதிகம் ஊழலுக்குட்பட்டுள்ள பொலிஸ் நீதித்தறைகளை சீர்திருத்தும் நோக்குடன் 2001 இல் முன்வைக்கப் பட்டது	இப்பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காக அரசியல் அமைப்பு நீதிமன்றம் எனும் தாபனம் முதன்முதலாக தாபிக்கப்பட்டது
28. 18ம் திரத்தச்சட்டம் 2010இல் நிறைவேற்று அதிகாரத்தை நீண்ட காலம் தக்கவைத்தக் கொள்ளும் நோக்குடன் உருவாக்கப்பட்டது	இத்திருத்தத்தின் பிரகாரம் ஜனாதிபதியானவர் 03 மாதங்களுக்கு ஒருமுறை பாராளுமன்றத்திற்கான வருகை அவசியமானது
29. 19ம் திருத்தச்சட்டம் நாட்டில் நல்லாட்சியை கட்டியெழுப்ப வேண்டும் எனும் மையக் கருவைக் கொண்டு 2015இல் உருவாக்கப்பட்டது	ஜனாதிபதியின் சர்வாதிகார,சுயநல அதிகாரங்களைக் கட்டுப்படுத்தும் நோக்கில் இத்திருத்தத்தின் ஊடாக முதன்முதலாக 10 போர் கொண்ட அரசியலமைப்பு பேரவை தாபிக்கப்பட்டது
30. இலங்கையின் வெளியுறவுக் கொள்கையினைத் தீர்மானிக்கும் காரணிகளில் ஆட்சியாளர்களின் தனிப்பட்ட அபிலாசைகள் தாக்கம் செலுத்துகின்றது	இலங்கையின் அளவு,பொருளாதாரம்,பிராந்திய வலுச்சமநிலை என்பன இலங்கையின் வெளியுறவுக் கொள்கையை பாதிக்கின்றது

K.S.NIMALRAJ BA

1) (அ) **"அரசின் அடிப்படைகளைப் பற்றியும் அரசாங்கத்தின் கோட்பாடுகளைப் பற்றியும் குறிப்பிடும் கற்கை நெறி அரசறிவியலாகும்"**

(ஆ) "அரசாங்கம் மற்றும் அரசாங்க நிறுவனங்களிடையான தொடர்பு பற்றிய பாடப்பரப்பு அரசறிவியலாகும்"

மேற்கூறிய அரசறிவியல் தொடர்பான விளக்கங்களை முன்வைத்த அரசியல் சிந்தணையாளர்களின் பெயர்களைக் குறிப்பிடுக.

.....
.....

2) (அ) **"படைப்புகள்"**

(ஆ) "வறுமையின் தத்துவம்" இவ்விரண்டு நூல்களினதும் ஆசிரியர்களைக் குறிப்பிடுக

.....
.....

3) ஓப்பீட்டு அரசியலின் இரு வடிவங்களும் எவை

.....
.....

4) அமுக்கக் குழுக்களுக்கு வழங்கப்படும் சிறப்புப் பெயர்கள் இரண்டு தருக

.....
.....

5) சிம்பாவே நாட்டில் காணப்பட்ட கோத்திர அரசுகள் இரண்டினைக் குறிப்பிடுக

.....
.....

6) உலகில் பின்பற்றப்படும் பிரதான அரசியல் யாப்பு மாதிரிகள் இரண்டினைக் குறிப்பிடுக

.....
.....

7) மூன்றாம் உலக நாடுகளில் சமவுடமை பற்றிய கருத்தியலை முன்வைத்த அறிஞர்கள் இருவரைக் குறிப்பிடுக

.....
.....

8) மோதல்கள் பற்றிய வகைப்பாடுகளில் எளிய வகைப்படுத்தல் நான்கு பிரிவுகளைக் கொண்டது அவற்றுள் இரண்டினைக் குறிப்பிடுக

.....
.....

9) ஐக்கிய அமெரிக்க அதிபரைத் தெரிவு செய்யும் அமைப்பின் பெயரையும் அவற்றின் உறுப்பினர் தொகையையும் குறிப்பிடுக

.....
.....

K.S.NIMALRAJ BA

10) பெரிய பிரித்தானிய நிறைவேற்றுத்துறையின் பிரதான இரு பிரவுகளையும் குறிப்பிடுக

.....
.....

11) காலணித்துவ ஆட்சி முறையானது இரண்டு முறைகளில் இனங்கானப்படுகின்றது அவ்விரு முறைகளையும் குறிப்பிடுக

.....
.....

12) 1833 கோல்புறுக் கமரன் அரசியல் சீர்திருத்த சட்டசபையில் 1859,1889 ஆகிய ஆண்டுகளில் திருத்தங்கள் கொண்டுவரப்பட்டன அவ்விரு திருத்தங்களையும் தெளிவு படுத்துக

.....
.....

13) 1833 கோல்புறுக் கமரன் அரசியல் சீர்திருத்தம் நீக்கிய இராஜகாரிய முறை எமது நாட்டில் இரண்டு முறைகளில் காணப்பட்டது அவ்விரு முறைகளையும் குறிப்பிடுக

.....
.....

14) 1931 டொனமூர் அரசியல் திட்டம் அதிகளவான ஜனநாயக சிறப்பம்சங்களை உள்ளடக்கியுள்ளது அவற்றுள் இரண்டிணைக் குறிப்பிடுக

.....
.....

15) 1947 சோல்பரி அரசியல் திட்டத்தின் கீழ் பாராளுமன்றத்தின் அதிகாரத்திற்கு எதிராக உள்ள தடைகள் இரண்டிணைக் குறிப்பிடுக

.....
.....

16) 1972 அரசியல் திட்டத்தில் முதன்மை ஸ்தானம் வழங்கப்பட்ட மொழியையும்,மதத்தையும் குறிப்பிடுக

.....
.....

17) 1978 மூல யாப்பின் பிரகாரம் ஜனாதிபதிக்கு எதிராக குற்றப்பிரேரணை நிறைவேற்றப்படும் சந்தர்பங்கள் இரண்டிணைக் குறிப்பிடுக

.....
.....

18) 19ம் திருத்தச்சட்டத்தின் பிரகாரம் இலங்கை பிரஜைக்கு கிடைக்கப் பெற்ற புதிய உரிமைகள் இரண்டிணைக் குறிப்பிடுக

.....
.....

19) ஐக்கிய நாடுகள் தாபனத்தின் மூலம் இலங்கை பெற்றுக் கொண்ட உதவிகள் இரண்டிணைக் குறிப்பிடுக

.....
.....

20) இலங்கையின் வெளியுறவுக் கொண்கையினைத் தீர்மானிக்கும் காரணிகள் இரண்டிணைக் குறிப்பிடுக

.....
.....

K.S.NIMALRAJ BA